# பரிசுத்த ஆவியானவரைப் புதிய ஏற்பாடு எவ்விதமாய்க் குறிப்பிடுகிறது?

*பரிசுத்த ஆவியானவரைப் பற்றிய வேதாகம போதனையைப் பற்றி நாம் முழுமையாகப் புரிந்துணர வேண்டும் என்றால், பரிசுத்த ஆவியான வருக்குப் பயன்படுத்தப்பட்ட பல்வேறு சொற்றொடர்களைப் பற்றிய புரிந்துகொள்ளுதல் அத்தியாவசியமானதாக உள்ளது. புதிய ஏற்பாடு அவரைப் பற்றிக் குறிப்பிடுகிற சில வழிமுறைகள் பின்வருமாறு:*

***ஆவியானவர்***

*லூக்கா, "இயேசு பரிசுத்த ஆவியினாலே நிறைந்தவராய் யோர்தானை விட்டுத் திரும்பி, ஆவியானவராலே வனாந்தரத்திற்குக் கொண்டு போகப் பட்டு" என்று எழுதினார் (லூக். 4:1). அவரைக் கொண்டுபோன ஆவி, பரிசுத்த ஆவியானவர்தாம் என்பது தெளிவு.*

*பரிசுத்த ஆவியானவரைத் தூஷித்தல் பற்றிக் குறிப்பிடும்போது, மாற்கு 3:29, "பரிசுத்த ஆவி" என்று கூறுகையில், மத்தேயு 12:31, "ஆவியானவருக்கு" என்று கூறுகிறது. (பழைய ஏற்பாட்டில் "ஆவி" என்ற வார்த்தையானது பரிசுத்த ஆவியானவரைக் குறிப்பதற்குப் பலமுறைகள் பயன்படுத்தப் பட்டது - உதாரணமாக எண். 11:17, 25-29; 27:18).*

***பிதாவின் ஆவியானவர்***

*அப்போஸ்தலர்களை ஏவினவரைக் குறிப்பிட்டபோது, மத்தேயு 10:20 "உங்கள் பிதாவின் ஆவியானவர்" என்பதைப் பயன்படுத்துகையில், மாற்கு 13:11 ''பரிசுத்த ஆவி'' என்பதைப் பயன்படுத்துகிறது. (''பிதாவின் ஆவியானவர்" என்பது பழைய ஏற்பாட்டில் காணப்படுவதில்லை.)*

***தேவனுடைய ஆவியானவர்***

*இயேசு ஞானஸ்நானம் பெற்றபோது அவர்மீது பரிசுத்த ஆவியானவர் இறங்கி வந்ததைப் பற்றிக் கூறியதில், மத்தேயு 3:16 "தேவ ஆவி" என்று குறிப்பிடுகிறது, மாற்கு 1:10 மற்றும் யோவான் 1:32 ஆகிய வசனங்கள் "ஆவியானவர்" என்று கூறுகின்றன, லூக்கா 3:22 "பரிசுத்த ஆவியானவர்" என்றும் கூறுகிறது. "தேவனுடைய ஆவியானவர்" என்ற வார்த்தையானது பரிசுத்த ஆவியானவரைக் குறிப்பதற்குப் புதிய ஏற்பாட்டின் மற்ற வசனப்பகுதிகளிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது (ரோமர் 8:9, 14; 1 கொரி. 2:11, 14; 3:16; 6:11; 7:40; 12:3; 2 கொரி. 3:3; எபே. 4:30). (பழைய ஏற்பாட்டில் "தேவனுடைய ஆவியானவர்" என்ற சொல் மீண்டும் மீண்டும் பயன்படுத்தப்பட்டுள்ளது: ஆதி. 1:2; யாத். 31:3; 35:31; எண். 24:2; 1 சாமு. 11:6.)*

***உதவியாளர் அல்லது தேற்றரவாளன்***

*யோவான் 14:26, "தேற்றரவாளன்" மற்றும் "பரிசுத்த ஆவி" ஆகிய சொற்றொடர்கள் ஒன்றுக்குப் பதில் இன்னொன்று என்ற வகையில் பயன்படுத்தப்படுகிறது:* "But the Helper ["Comforter," KJV; "Counselor," NIV], the Holy Spirit, ..."

***சத்திய ஆவியானவர்***

*யோவான் 14:16, 17ல் "தேற்றரவாளன்" மற்றும் "சத்திய ஆவியானவர்" என்ற வார்த்தைகள் ஒன்றுக்கு பதில் இன்னொன்றாகப் பயன்படுத்தப் பட்டுள்ளது. இது யோவான் 15:26க்கும் உண்மையாக உள்ளது: "பிதா வினிடத்திலிருந்து நான் உங்களுக்கு அனுப்பப்போகிறவரும், பிதாவினி டத்திலிருந்து புறப்படுகிறவருமாகிய சத்திய ஆவியான தேற்றரவாளன் வரும்போது, அவர் என்னைக்குறித்துச் சாட்சி கொடுப்பார்."*

***கர்த்தருடைய ஆவியானவர்***

*லூக்கா 4:18ல் இயேசு, "கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக் கிறார்" என்று கூறினார். அப். 5:9ம் கூட, "கர்த்தருடைய ஆவி"யானவரைப் பற்றி (5:3ல் "பரிசுத்த ஆவியானவர்" என்று குறிப்பிட்ட) குறிப்பிடுகிறது. 2 கொரிந்தியர் 3:17ஐ வாசியுங்கள். (பழைய ஏற்பாடு "கர்த்தருடைய ஆவியானவர்" என்று பலமுறை கூறுகிறது - உதாரணமாக, நியா. 6:34; 11:29; 13:25; 14:6).*

***இயேசுவின் அல்லது கிறிஸ்துவின் ஆவி***

*ரோமர் 8:9, "கிறிஸ்துவின் ஆவி"யைப் பற்றிப் பேசுகிறது. கலாத்தியர் 4:6ல், "தமது குமாரனுடைய ஆவி" என்றுள்ளது. பிலிப்பியர் 1:19ஐயும், 1 பேதுரு 1:11ஐயும் வாசியுங்கள். 2 பேதுரு 1:20, 21ஐ, 1 பேதுரு 1:11உடன் ஒப்பிடுவதினால் நாம், கிறிஸ்துவின் ஆவியும் பரிசுத்த ஆவியானவரும் ஒன்றே என்று முடிவு செய்ய இயலும்.*

*பரிசுத்த ஆவியானவரைப் பற்றிக் கலந்துரையாடுவதில், அவர் பல்வேறு மாறுபட்ட சொற்றொடர்களினால் குறிப்பிடப்படுகின்றார் என்பதை நாம் உணர்ந்தறிதல் என்பது நமக்கு முக்கியமானதாக உள்ளது. மாறுபட்ட இந்தச் சொற்றொடர்கள் வேத வசனங்களில் காணப்படும் ஒவ்வொரு முறையும், கவனத்தின் கீழ் இருப்பவர் பரிசுத்த ஆவியானவர்தான் என்று நாம் நிரூபிக்க அவசியமில்லை. சந்தர்ப்பப் பொருள் வேறொரு அர்த்தத்தைக் கேட்டுக் கொள்ளாத வரையில், இவரே அர்த்தப்படுத்தப்படுகின்றார் என்பதில் நாம் நிச்சயமாயிருக்க முடியும்.*

# பரிசுத்த ஆவியானவரைத் தூஷித்தல்

*பரிசுத்த ஆவியானவருக்கு எதிரான எல்லாப் பாவங்களிலும், மிகவும் அதிகமாகக் கலந்துரையாடப்படுவது, பரிசுத்த ஆவியானவருக்கு எதிரான தூஷணமேயாகும். ஆவியானவருக்கு எதிரான தூஷணம் என்று இயேசு பேசியபோது, அவர் எதை அர்த்தப்படுத்தினார் என்பது பற்றி மிகவும் பரவலான அளவில் விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. நான்கு சுவிசேஷங்களில் மூன்றில் இந்தக் குற்றம் குறிப்பிடப்பட்டுள்ளது (மத். 12:31, 32; மாற். 3:28, 29; லூக். 12:9, 10).*

*வேதாகமத்தின் மற்ற வேத வசனப்பகுதிகள் பரிசுத்த ஆவியானவரைத் தூஷணப்படுத்துதலைக் குறிப்பிடுவதாகச் சிலர் தவறாகப் போதித்துள்ளனர். உதாரணமாக, எபிரெயர் 6:4-6 மற்றும் 1 யோவான் 5:16 ஆகிய வசனப்பகுதிகள், திட்டவட்டமான ஒரு பாவத்தைக் குறிப்பிடுவதில்லை, அல்லது, அதை எழுதியவர்கள் அந்த பாவத்தை பெயரிட்டுக் குறித்திருப்பார்கள். அதற்கு மாருக, இந்த வசனங்கள் பாவத்தைப்பற்றி பொதுவாகக் குறிப்பிடுகின்றன. அதற்கு மாருக, இயேசு, பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமாய்த் தீமையானவற்றைப் பேசுதல் என்ற திட்டவட்டமான பாவம் ஒன்றைப் பற்றிப் பேசிஞர்.*

*மத்தேயு சுவிசேஷத்தின் சந்தர்ப்பப் பொருளானது, மற்றவர்களின் பார்வையில் பரிசுத்த ஆவியானவரின் புகழ்ச்சியைப் புண்படுத்தும் நோக்கங் கொண்டிருத்தல் என்பது பரிசுத்த ஆவியானவருக்கு எதிரான தூஷணம் என்று சுட்டிக்காண்பிக்கிறது. இயேசுவின் ஊழியங்கள் சாத்தானுடைய வல்லமையினால் செய்யப்பட்டன என்று மக்கள் நம்ப வேண்டும் என்பதற்காக, அவர்களிடம் பரிசேயர்கள் இயேசுவுக்கு எதிராகப் பேசினர் (மத். 12:24). அவர்கள் [பரிசேயர்கள்], இயேசுவையும் அவரது போதனையையும் புறக்கணித்தலுக்கு அப்பாலும் சென்றிருந்தனர்; அவர்கள் தூஷணம் பேசினர். இவ்வாறு இயேசுவுக்கு எதிராகப் பேசப்படுவது மன்னிக்கப்படும் என்று இயேசு சுட்டிக்காண்பித்தார் (மத். 12:32).*

*பவுல் - அவர் சவுல் என்று அறியப்பட்ட காலத்தில் - கிறிஸ்தவர்களை உபத்திரவப்படுத்தியதினால் இயேசுவுக்கு எதிராக, தூஷணம் செய்தல் வரையிலும் கூட செயல்பட்டார் (1 தீமோ. 1:13-16). இவர் இயேசுவுக்கு எதிராகத் தூஷணம் உரைத்து மன்னிக்கப்பட்டவர்களுக்கு ஒரு உதாரணமாக இருக்கின்றார்.*

*இதற்கு நேர்மாறாக, பரிசுத்த ஆவியானவருக்கு எதிராக, பொல்லாத சிந்தையுடன் பேசுபவர்கள் மன்னிக்கப்பட மாட்டார்கள் என்று இயேசு போதித்தார். இதைச் செய்பவர்கள், கிறிஸ்தவத்தின் அடிப்படையைக் காட்டிலும் அதிகமானவற்றைப் புரிந்துகொண்டிருக்க வேண்டும். இவர்கள், பரிசுத்த ஆவியானவரின் கிரியைகள் உட்பட நேர்த்தியான கருத்துக்களைப் புரிந்துகொண்டிருக்க வேண்டும். அவருக்கு எதிராகப் பேசுவதில், இவர்கள் அவரது செயல்பாடுகளைப் புறக்கணிப்பது மட்டுமின்றி, அவரது கிரியைகளைச் சாத்தானுடையவை என்று குறிப்பிடுவதின்மூலம் மற்றவர்களையும்*

*அவரிடம் இருந்து விலக்கி வழிநடத்த நாடுவார்கள். இவர்களின் முயற்சிகளின் மூலமாக, இவர்கள் தங்களுக்கு அழிவை வருவித்துக் கொள்வதுடன், தங்கள் போதனையை ஏற்றுக்கொள்பவர்கள் இழந்துபோகப்படவும் காரணமாவார்கள்.*

*தூஷணம் பேசுதல் என்பது பரிசுத்த ஆவியானவரின் வசனத்தைப் புறக்கணிப்பதைக் காட்டிலும் அதிகமானதாக உள்ளது. இது பரிசுத்த ஆவியானவரின் கிரியைகளைக் கனவீனப்படுத்தும் வகையிலும், அவரது கிரியைகள் பொல்லாங்கான ஆதாரமூலத்திலிருந்து வருகின்றன என்று மற்றவர்கள் நம்பும்படி இணங்கச் செய்யும் வகையிலும் பேசுதலாக உள்ளது. எவரொருவரும் இதை அவ்வளவு இலேசாகச் செய்து விடமாட்டார்கள். இவ்வகையாகச் செயல்படுபவரின் இருதயத்தில் இழிவான துர்க்குணம் இருக்கும். இவ்விதமான நடக்கைக்குத் தன்னை ஒப்புக்கொடுத்துள்ள எவரும் இம்மையிலும் மறுமையிலும் மன்னிக்கப்படுவதில்லை; அவர் ஒரு நித்தியமான பாவத்தைச் செய்கின்றார் (மாற். 3:29).*

*பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமாகத் தூஷணம் உரைத்தல் என்பது பின்வரும் மூன்று குற்றங்களை உள்ளடக்குகிறது: (1) பரிசுத்த ஆவியானவரைக் குறித்து இருதயத்தில் இழிவான துர்க்குணம் கொண்டிருத்தல், (2) அவரைக் குறித்து மற்றவர்களிடத்தில் பொல்லாங்காய்ப் பேசுதல், மற்றும், (3) மற்றவர்கள் அவரது கிரியைகளைப் புறக்கணிக்கும்படியும் அது ஒரு பொல்லாத ஆதாரமூலத்தில் இருந்து வருகிறது என்று நம்பும்படியும் அவர்கள்மீது செல்வாக்குச் செலுத்த நாடுதல்.*

---

## *இயேசுவும் பரிசுத்த ஆவியானவரும்*

*பரிசுத்த ஆவியானவருடைய கிரியையின் நோக்கம் இயேசுவை நிழலிடுதலாய் இராமல் அவரை மகிமைப்படுத்தி மேன்மைப்படுத்துவதாக உள்ளது. இயேசு, "சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார், அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ் சொல்லி, ... அவர் ... என்னை மகிமைப்படுத்துவார்" (யோவா. 16:13, 14) என்று கூறினார். தன்னைச் சுட்டிக்காண்பிக்காமல் இயேசுவைச் சுட்டிக்காண்பித்த, யோவான் ஸ்நானனைப் போல் (யோவா. 1:26, 27), இயேசுவே கனத்தையும், மகிமையையும் மற்றும் வல்லமையையும் பெற்றிருக்கும்படிக்கு, அவரையே ஆவியானவர் மகிமைப்படுத்துவார் (வெளி. 4:11).*

# இயேசு மாறாதவராயிருக்கின்றார்

*“இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்” (எபி. 13:8) என்ற கூற்றினிமித்தமாக, சில மதக்குழுவினர், இன்றைய நாட்களில் அடையாளங்களும் பலத்த செயல்களும் தொடருவதை எதிர்பார்க்கின்றனர். இந்த முடிவு சரியானதாக இருக்க இயலாது; ஏனெனில் இவ்வசனப்பகுதியானது கலந்துரையாடலுக்கான பாடக்கருத்தாயிராமல், தேவனுடைய மக்கள் மீது அவரது அருளிரக்கமுள்ள மற்றும் நிலைத்ததாக உள்ள பராமரிப்பைக் குறித்த பாடக்கருத்தாக இருக்கிறது (எபி. 13:5, 6). மற்றும் இவ்வசனப்பகுதியானது இயேசுவின் இருத்தல்நிலை அல்லது அவர் செய்திருக்கின்ற செயல்கள் ஆகியவற்றின் எல்லா அம்சங்களும் எப்போதும் ஒரேமாதிரியாக இருக்கும் என்று போதிக்க இயலாது. எல்லாக் கருத்திலும் இயேசு என்றும் ஒரேமாதிரியாக இருந்துள்ளதில்லை; உதாரணமாக, அவர் பூமிக்கு வந்து ஒரு மனித உருவை எடுப்பதற்கு முன்பு, ஒரு ஆவி வடிவத்தில் இருந்தார் (யோவா. 1:14; எபி. 10:5இ), மற்றும் அவர் அதன் பின்பு அவர் தமது பிதாவினிடத்திற்கு ஏறிச்சென்றபோது அவர் தமது தொடக்கக் கால இயல்புக்குத் திரும்பினார் (யோவா. 17:5). இப்போது இயேசு இங்கு பூமியில் ஒரு நபராக இருப்பதுமில்லை அல்லது அவர் தேவனுடைய குமாரனாக இருக்கின்றார் என்று நாம் விசுவாசிக்கும்படிக்கு அற்புதங்கள் செய்வதற்காக அவர் மீண்டும் ஒரு நபராக வரப்போவதுமில்லை. நாம் அவரை விசுவாசிக்கக்கூடும்படிக்கு, அந்த நோக்கத்திற்காக அவர் இந்த பூமியில் இருந்த வேளையில் அடையாளங்களையம் பலத்த செய்கை களையும் செய்தார் (யோவான் 20:30, 31). அதுபோலவே, சிலுவையில் அவரது மீட்பளிக்கும் மரணம் என்பது தொடர்ந்து நடைபெறுவதாக அல்ல, ஆனால் எல்லா காலத்திற்குமாக ஒரேதரம் நிறைவேறிய செயலாக இருக்கிறது, இது ஒருக்காலும் மீண்டும் செய்யப்படாது (எபி. 1:3; 7:27; 9:12, 24-26; 10:12-14).*

*இயேசு தமது மாம்சத்திற்குப் புறம்பே செய்யும் செயல்களும் எப் போதும் ஒரேமாதிரியாக இருந்தது இல்லை. அவர் ஆறுநாளைக்குள்ளே (ஆதி. 2:2; யாத். 20:11) யாவற்றையும் படைத்தார் (யோவா. 1:3; கொலோ. 1:16), இது நாம் அறிந்த வரைக்கும் மீண்டும் செய்யப்பட்டிராத முடிந்து போன செயலாக உள்ளது. படைப்பு என்ற அற்புதத்தின் மூலமாக இயேசு, தமது இருத்தலையும் மகிமையையும் மனிதகுலத்திற்கு நிரூபித்துள்ளார் (ரோம. 1:19, 20; சங்.19:1; யோவா.1:1-3). அவர் - கூட்டப்படவோ அல்லது மாற்றப்படவோ அவசியமற்ற வகையில் (கலா. 1:8, 9; வெளி. 22:18, 19) - சகல சத்தியத்தையும் (யோவா. 14:26; 16:13; யூதா 3) வெளிப்படுத் தியுள்ளார், அவர் தொடர்ந்து புதிய சத்தியம் எதையும் வெளிப்படுத்து வதில்லை.*

*இயேசு தமது ஆளுமைத்தன்மையிலும் நம்மீது அவர் கொண்டுள்ள அக்கறையான பராமரிப்பிலும் சீரானவராக இருக்கின்றார், ஆனால் இது, அவரில் நாம் விசுவாசம் கொள்ளும்படிக்கு அவர் புதிய உலகங்களைப்*

*படைப்பார் என்றோ, நமது பாவங்களுக்காகத் திரும்பவும் மரித்து உயிர்த்தெழுவார் என்றோ, அல்லது மீண்டும் தண்ணீரின்மேல் நடப்பார் என்றோ, ஒருசில அப்பங்களையும் சிலமீன்களையும் கொண்டு அதிகமான மக்கள் கூட்டத்திற்குத் திரும்பவும் உணவளிப்பார் என்றோ அல்லது தமது மாபெரும் அற்புதங்களில் எதையாவது திரும்பவும் செய்வார் என்றோ அர்த்தப்படுவது இல்லை. நமது விசுவாசமானது காணப்படக் கூடிய அற்புதங்களின் அடிப்படையில் அமையக்கூடாததாக உள்ளது. நாம் காணாதிருந்தும் எழுதப்பட்ட தேவனுடைய சாட்சியத்தை விசுவாசித்தால் நாம் பாக்கியவான்களாக இருக்கின்றோம் (யோவா. 20:29ஆ வைக் காணவும்). நாம் உட்பட, தொடர்ந்து வரும் சந்ததிகள் யாவும், அவர் தேவகுமாரனாகிய கிறிஸ்துவாக இருக்கின்றார் என்று விசுவாசிக்கும் படியாக அவரது அற்புதங்கள் நிகழ்த்தப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளன (யோவா. 20:30, 31).*

*இயேசுவை தேவன் "பலத்த செய்கைகளையும், அற்புதங்களையும், அடையாளங்களையும்" (அப். 2:22) கொண்டு அங்கீகரித்திருந்தார் என் பதைப் பெந்தெகொஸ்தே நாளில் பேதுருவைக் கொண்டு அவரே (தேவனே) சாட்சிகொடுத்தார். இயேசுவில் விசுவாசம் கொள்ளாதவர்கள், இயேசுவைக் குறித்த தேவனுடைய சாட்சியைப் பற்றிச் சந்தேகப்படு கின்றனர்: "... தேவனை விசுவாசியாதவனோ, தேவன் தம்முடைய குமாரனைக்குறித்துக் கொடுத்த சாட்சியை விசுவாசியாததினால், அவரைப் பொய்யராக்குகிறான்" (1 யோவா. 5:10). இவ்வசனமானது தேவன் தொடர்ந்து சாட்சி கொடுக்கின்றார் என்பது போல், தேவன் "கொடுக்கின்ற" சாட்சி என்று குறிப்பிடுவதில்லை. மாறாக இது, (தேவன்) "கொடுத்த"* (Gk.: *memartureken*, *ஒரு பூரணமான, சுட்டிக் காட்டும் செய்வினைச் சொல்) என்று கூறுகிறது, இது அந்தச் செய்கை முடிந்துவிட்டது ஆனால் தொடரும் விளைவுகளைக் கொண்டுள்ளது என்று சுட்டிக்காண்பிக்கிறது. இந்த வினைச் சொல்லானது, இயேசுவைப் பற்றித் தேவன் தமது சாட்சியத்தை அளித்து முடித்துவிட்டார், ஆனால் இந்த சாட்சியமானது விசுவாசத்தை உண்டாக்கும்படிக்கு இன்னமும் இருக்கிறது என்று மறைமுகமாய் உணர்த்துகிறது. தேவனுடைய கடந்தகால சாட்சியம் இயேசுவின் அற்புதங்கள், அவரது கிரியைகள் பற்றி எழுதப்பட்ட பதிவேட்டின் மூலமாகத் தொடர்ந்து விளைவுகளை ஏற்படுத்துவதினால், விசுவாசமானது தொடர்ந்து உண்டாக்கப்பட வேண்டியதாக உள்ளது (யோவா. 20:30, 31).*